[1970 மார்ச் 23

504 வினா—திரு. கரு. சீமைச்சாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

சென்னை கூவம் ஆற்றின் சீரமைப்புத் திட்டத்தின் வேலைகள் எப்போது முடியும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கூவம் ஆற்றுச் சீர மைப்புத் திட்டம் 1970-ம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் முடிவடை யும் என எதிர்பார்க்கிறேன்.

* 505 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there are proposals under the consideration of the Government to have a boat club at the Cooum near Napier bridge?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம். நேப்பியர் பாலத்தின் கிழக்கே கூவம் ஆற்றின் வலது கரையில் படகு ஓட்டு வோர் கழகத்திற்காகக் கட்டிடம் ஒன்றும், சிற்றுண்டிச்சாலை ஒன் றும், 3.2 லட்சம் ரூபாய் செலவில் கட்டும் செயற்குறிப்பு உள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவாவர்களே, சிந்து நதியின் மீதினிலே, சேர நன்னாட்டிளம் பெண்களுடனே, சுந்தரத் தெலுங்கி னில் பாட்டிசைத்து, தோணிகளோட்டி விளையாடிடுவோம் என்று பாரதியார் சொன்னதைப்போல், கூவம் நதியில் படகு விடும் திட்ட முள்ளதா? அப்படியிருந்தால் அதனை 72-ம் ஆண்டிற்குள் செயல் படுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கனவு உலகத்தில் சஞ்சரிக்க வேண்டா மென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். மாண்புமிகு உறுப்பினர் களுக்கு, கூவம் நதி சீரமைப்புத் திட்டத்தை நல்ல முறையில் காண்பிக்க வேண்டுமென்பதற்காக நாளைய தினம் 24-ம் தேதி 4 மணிக்கு ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் அந்தப் பார்வைக்கு வந்தால் இந்தத் திட்டத்தைப் பற்றி விவரமாகத் தெரிந்து கொள்ளலாம். தேனீர் விருந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

திரு. கே. விநயகம் : கூவம் நதி சீரமைப்பு செய்கிற வேலையிலே அமைச்சர்கள் அதைப் போய்ப் பார்ப்பதற்காக தனியே ஒரு ரோடு கூவம் ஆற்றிலே போடப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. அதிலே கார்களைச் செலுத்த, அந்த இடம் பிரிட்ஜ் வரை போடுவதற்கு எவ் வளவு செலவானது அந்த ரோடு போடுவதற்கு மாத்திரம்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அமைச்சர் களுக்குத் தனியாக ரோடு போட்டதாகத் தகவல் இல்லை. நாளைய தினம் நம்முடைய மாண்புமிகு உறுப்பினரவர்கள் வந்தால் எல்லாம் தெரிந்து கொள்ளலாம்.